## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**CC.No. 190 /2014 P.W. 2 / LW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **வேம்பு** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ.மணிகண்டன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.09.2022.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது தஞ்சாவூர் காவேரி நகரில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அசா 1 எனது கணவர் ஆவார். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்கு தெரியும். கடந்த 2011ல் எனது அக்கா சுசீலா மூலமாக வசந்தாவிடம் சீட்டுப்போட்டோம். மொத்தத்தில் 25 தவனைகளில் 24 தவனையாக பணம் ரூ. 1லட்சம் வரை வசந்தாவிடம் கட்டியுள்ளேன். 24 தவனைவரை எங்களை சீட்டுப்பணம் கேட்கவிடவில்லை. அவர்களுடைய நடவடிக்கை எங்களை ஏமாற்றியதுபோல் தெரியவந்தது.

2) தஞ்சாவூரில் இருந்து நான் குடியிருக்கும் பகுதியில் உள்ளவர்களை அழைத்து வந்து வசந்தாவிடம் சீட்டுப்பணம் சம்பந்தமாக கேட்டபோது மூன்று தவனைகளாக பணத்தை திரும்ப தருவதாக ஒப்புக்கொண்டு விட்டு தரவில்லை. பணம் தரப்படாததால் மன்னார்குடி நகர காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். மேற்படி ஆய்வாளர் விசாரித்தார். அப்போதும் ஒரு வாரத்தில் பணத்தை தருவதாக சொல்லிவிட்டு போனார்கள். பணத்தை திரும்ப தரவில்லை. என்னைத்தவிர எனது அக்கா சுசீலா மற்றும் சேரங்குளத்தை சேர்ந்த நபர்களையும் ரூ. 35 லட்சம் வரை வசந்தா ஏமாற்றிவிட்டு தலைமறைவாகிவிட்டார்.

3) மீண்டும் நாங்கள் மன்னார்குடி நகர காவல்நிலையத்திற்கு இது சம்பந்தமாக கேட்டதற்கு சரியான பதில் இல்லாததால் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் சென்று புகார் கொடுத்தோம். மாவட்ட காவல்கண்காணிப்பாளர் உத்தரவின்படி உடனடியாக நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார்கள். நாங்கள் கொடுத்த வழக்கில் வசந்தாவை கைது செய்து சிறைக்கு அனுப்பி வைத்தார்கள். இதுநாள் வரையில் நாங்கள் கட்டிய சீட்டுப்பணத்தை எதிரிகள் திரும்ப தரவில்லை. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் சீட்டு

அட்டை 2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் நான் பணம் செலுத்தியதற்கு என்னிடம் கொடுத்ததுதான்.

4) நான் பணம் கொடுத்ததற்கு குறிப்புகள் அடங்கியுள்ளது. **அது அ.சா-ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ( ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ) என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அசாஆ.2 குற்றம் சுமத்தப்பப்பட்ட நபர்கள் பணத்தை திரும்ப தருவதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்த பத்திரம். நாளது தேதிவரை எனக்கு பணம் தராமல் ஏமாற்றி வருகிறார்கள். எங்களுக்கு உரிய நியாயம் வேண்டும் . ( சாட்சி அழுதுகொண்டே சாட்சியம் அளிக்கிறார். ) நான் எதிரிகளிடம் செலுத்திய சீட்டுப்பணத்தை திரும்ப பெற்றுத்தரவும் வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

1) நான் சீட்டுக்கட்டியதற்கு ஆதரவாக வேறு எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 25 மாதத்தவனையில் 24 மாதம் தவனையை செலுத்தியுள்ளேன் என்ற தகவலை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன். ஏலத்தில் சீட்டை என்னை கேட்கவிடவில்லை என்ற சங்கதியையும் நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன்.

2) நான் எனது ஊர்க்காரர்களை அழைத்து வந்து மூன்று தவனையாக பணம் தருவதாக எதிரிகள் எழுதிக்கொடுத்தார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன். மேற்படி ஆவணத்தையும் போலீசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் ஆம் கொடுத்துள்ளேன். ஒரு வாரத்தில் பணத்தை திரும்ப தருவதாக ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் சொன்னார்கள் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம் சொல்லியுள்ளேன்.

3) நான் பணம் செலுத்தியதற்கான அட்டை மற்றும் அது சம்பந்தமான ஆவணங்களை நான் ஆய்வாளர் சரவணனிடம் கொடுத்த பிறகு அவரால் பூர்த்தி செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் ஆம். அந்த ஆவணம் அசாஆ. 2 மற்றும் 3 ஆகும். ஏச்சீட்டு என்றால் என்ன என்றும், கசறு என்றால் என்ன என்றும், அந்த கசறு பணத்தை பிரித்து கொடுத்த பிறகு மீதத்தொகைதான் தவனைத்தொகை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும்.

4) பணம் கட்டியதாக சொல்லக்கூடிய தொகை 3 வது காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

என்று சொன்னால் சரிதான். மேற்படி அசா.ஆ.3 ல்உள்ள சங்கதிகள் நான் குறித்துவைத்துக்கொண்டதுதான். அதனை நான்தான் எழுதினேன். இந்த விவரத்தையும் போலிசார் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். இந்த வழக்கின் புகாரை நான் கொடுத்தேனா என்றால் ஆம் கொடுத்தேன். அதன் பேரில் என்ன நடவடிக்கை இல்லை என்பதால் என் கணவர் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். எனது சகோதரி சுசீலா புகார் கொடுத்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. நான்கொடுத்த புகாரில் சுசீலா மற்றும் சுமதியும் சாட்சிக்கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

5) நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளின்படி ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எனக்கு எந்தவகையிலும் பணம் தர தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல்எந்தவித சீட்டுப்பணமும் கட்டவில்லை என்பதால் எனக்கு அவர்கள் தரதேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் சீட்டு நடத்தவே இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.